**திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**
**(ஜுலை 27-ம் தேதி முதல் ஜுலை 31-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (22.7.16- 25.7.16)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 1.0 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 33- 36 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25- 27 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 3- 4 |
| ஒப்புஈரப்பதம்(சதவீதம்) (07:00 LM T) | 56- 63 |
| ஒப்புஈரப்பதம்(சதவீதம்) (14:00 LM T) | 43- 53 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 0- 2 |
| காற்றின் திசை (டிகிரி) | 0- 320 |

31.7.16 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் - 1<br>27.7.16 | நாள் - 2<br>28.7.16 | நாள் - 3<br>29.7.16 | நாள் - 4<br>30.7.16 | நாள் - 5<br>31.7.16 |
| மழை (மி.மீ.) | 1 | 6 | 3 | 4 | 2 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 36 | 36 | 36 | 35 | 35 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 27 | 27 | 27 | 26 | 26 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| ஒப்புஈரப்பதம் (சதவீதம்) | 46- 58 | 46- 58 | 46- 58 | 52- 62 | 52- 62 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 3/ வடமேற்கு | 3/ வடமேற்கு | 3/ வடமேற்கு | 4/ வடமேற்கு | 4/ வடமேற்கு |

வரும் தினங்களில் அதிகமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர்/ சாகுபடி சூழல் | பருவம், சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனைகள் |
|---|---|---|
| மானாவாரி மற்றும் தோட்டக்கால் பயிர்கள் | நீர் மேலாண்மை | வரும் தினங்களில் அதிகமான மேகமூட்டம், இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் மற்றும் பூச்சிக்கொல்லி தெளிப்பதை தள்ளிப்போடவும். |
| கத்தரி, தக்காளி. | காய்க்கும் பருவம் | வரும் தினங்களில் அதிகமான மேகமூட்டம், இலேசானது முதல் மிதமான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் எதிர்பார்க்கப்படுகிறது. கத்தரி மற்றும் தக்காளியில் பயிர் சிலந்தி மற்றும் காய்த்துளைப்பானின் தாக்குதல் தென்படுகிறது.<br>இதனை கட்டுப்படுத்த<br>• டைகோபால் 2.5 மி.லி./ லிட்டர் அல்லது<br>நனையும் கந்தகம் 2 கிராம்/ லிட்டர் அல்லது<br>• எத்தியான் 50% EC 1 மி.லி./லிட்டர் டைமீத்தோயேட் 30% EC 2 மி.லி./லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| மல்லிகை | பூக்கும் பருவம் | வரும் தினங்களில் அதிகமான மேகமூட்டம் இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் மல்லிகையில் மொட்டுப்புழுக்கள் இளம்மொட்டுக்களை தாக்கி பெருத்த சேதங்களை உண்டு பண்ணும். இவற்றைக் கட்டுப்படுத்த மோனோகுரோட்டோபாஸ் 2 மி.லி./ லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். |
| எலுமிச்சை | காய்க்கும் பருவம் | வரும் தினங்களில் அதிகமான மேகமூட்டம், மித மற்றும் அதிகமான காற்று, இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் எலுமிச்சைப் பழங்களில் சொறிநோய் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. இதனைக் கட்டுப்படுத்த ஸ்டெரப்டோமைசின் மருந்தை 100 பிபிஎம் அடர்த்தியில் காப்பர் ஆக்ஸி |

| | | |
|---|---|---|
| | | தெளிக்கவும். |
| நெல் | நாற்றங்கால் | வரும் தினங்களில் மிதமானது முதல் அதிகமான மேகமூட்டம், மிதமான காற்று, இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வானிலையில் நெல்லில் இலைப்பேன் தாக்குதல் தென்பட அதிக வாய்ப்புள்ளது.<br><br>• பூச்சிக்கணக்கெடுத்தல்: நனைத்த உள்ளங்கையை இலைகளின் மீது 12 இடங்களில் தடவி எடுக்கவும்; வீச்சுக்கு 60 க்கு மேல் இருந்தால் (அ) 10 சத நாற்றுகளில் மேலிரண்டு இலைகள் பாதி அளவு சுருண்டு காணப்பட்டால், கீழ்க்கண்ட பூச்சிக்கொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்ற[[pனைத் தெளிக்கவும்.<br>• பாஸ்போமிடான் 40 எஸ்.எல். 2 மி.லி./ லிட்டர்<br>• மானோகுரோட்டோபாஸ் 36 எஸ்.எல். 2 மி.லி./ லிட்டர் |

குறுஞ்செய்தி- மழை: 27& 31.7.16: 1, 6, 3, 4& 2 மி.மீ. கத்தரி - பயிர் சிலந்தி- கட்டுப்படுத்த டைகோபால் 2.5 மி.லி./ லிட்டர் அல்லது நனையும் கந்தகம் 2 கிராம்/ லிட்டர் தெளிக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்**
**கோவில்பட்டி**